

Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீ சங்கர ஜயந்தி சிறப்பு இதழ்
ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாஸந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை அடையும்வரை, மனிதன் பல ஜன்மங்களை எடுத்துக்கொண்டே இருப்பான். அந்த ஜன்மங்களில் பூர்வ ஜன்ம வாஸனை தொடரும். கர்மங்களைச் செய்வான், கர்மபலன்களை அனுபவிப்பான். இவ்வாறு மீண்டும் மீண்டும் ஜனன மரணச் சக்கரம் சுற்றிக்கொண்டே இருக்கும். சற்று சிந்தித்துப் பார்த்தால் கட்டுப்பாடற்ற மனமே இதற்குக் காரணம் என்பது தெரிய வரும்.

यावदन्यं न विन्देत व्यवधानेन कर्मणाम्।
मन एव मनुष्येन्द्र भूतानां मयभावनम् ।।
யாவத3ன்யம்' ந விந்தே3த வ்யவதா4னேன கர்மணாம் |
மன ஏவ மனுஷ்யேந்த்3ர பூ4தானாம்' மயபா4வனம் ||

இவ்வாறாக ஆத்மா உடலை ஏற்றுக் கொள்ளவும், விடவும் செய்கிறது. இதன் காரணமாக மகிழ்ச்சி, இன்பம், துன்பம், பயம், வருத்தம் போன்றவை உண்டாகின்றன.

अनेन पुरुषों देहानुपादत्ते विमुञ्चति।
हर्ष शोक भयं दुःखं सुखं चानेन विन्दति ।।
அனேன புருஷோம்' தே3ஹானுபாத3த்தே விமுஞ்சதி |
ஹர்ஷம்' ஶோக ப4யம்' து3:க2ம்' ஸுக2ம்' சானேன விந்த3தி ||

இங்கு மனஸ் என்பது விஷய வாஸனை, பற்று, அதை ஒட்டிய கர்மாக்கள், அவற்றின் பலன்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். பற்றுதலுடன் கர்மாக்களைச் செய்தால் அவற்றின் பலனை அனுபவிக்க வேண்டி வரும். அதுவே புனர்ஜன்மத்திற்குக் காரணமாகிவிடும்.

यदा हि कर्मफलतृष्णाप्रयुक्तः कर्मणि प्रवर्तते तदा कर्मफलस्य एच जन्मनः हेतुः भवेत् ।

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

யதா³ ஹி கர்மப²லத்ரு’ஷ்ணாப்ரயுக்த: கர்மணி ப்ரவர்ததே ததா³ கர்மப²லஸ்ய ஏச ஜன்மன: ஹேது: ப⁴வேத் |

என்று ஸ்ரீ ஆதி சங்கரர் தமது பாஷ்யத்தில் அழகாகக் கூறியிருக்கிறார். ஆகையால். மனிதன் கர்மத்தைச் செய்யும்பொழுது எந்தவிதமான பற்றுதலோ, பயமோ பலாபேக்ஷையோ இல்லாமல் ஈச்வரார்ப்பணமாகச் செய்தால் மனஸும் தெளிவாகிவிடும். எல்லா நன்மைகளுக்கும் காரணமாக அமையும். இதை நன்றாகப் புரிந்துகொண்டு ஸத் கர்மத்தை ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்துவர எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

மஹான்கள் தங்களுக்கு எது கிடைக்க வேண்டும் என்று பகவனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அது கிடைத்தால் போதும் என்று கருதித் திருப்தியுடனிருப்பார்கள். “ஈச்வரன் எது கொடுக்க நினைத்தாலும் அதில் எங்களுக்குத் திருப்தி” என்பார்கள் அவர்கள். இது விஷயம் குறித்து பகவான் கீதையில் முக்கியமானதொரு உபதேசம் கொடுத்துள்ளார்.

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாऽபி ந நிபத்யதே ॥

“என்னுடைய கடமையை நான் செய்கிறேன். எந்தப் பலன் கிடைத்தாலும் எனக்குச் சந்தோஷம்தான்” – இத்தகைய பாவனை மனிதர்கள் அனைவருக்கும் இருக்க வேண்டும். இவ்வாறில்லாமல் பலன் இவ்வளவு வர வேண்டும். அவ்வளவு வர வேண்டும் என்று எதிர்பார்த்தால் எந்தவிதப் பிரயோஜனமுமில்லை. ஏனென்றால், நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நடந்துவிடப் போவதில்லை. ஆகவே, இறைவன் என்ன கொடுக்கிறானோ அதிலேயே ஆனந்தமாக இருப்பது பற்றித்தான் பகவான் கூறினார்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

॥ श्रीः ॥

॥ शिवपञ्चाक्षरनक्षत्रमालास्तोत्रम् ॥

சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரம்.

[27 சுலோகங்கள் கொண்ட இந்த ஸ்தோத்திரம் 27 முத்துக்கள் கொண்ட நக்ஷத்திரமாலையாக அமைந்திருக்கிறது ஒவ்வொரு சுலோகத்தின் ஒவ்வொரு பாதத்திலும் முடிவில் சிவபஞ்சாக்ஷரமுத்ரை காணப்படுவது ஓர் விசேஷம். இந்த நக்ஷத்திரமாலையை கழுத்தில் அணிந்து கொள்பவன் அதாவது மனப்பாடம் செய்து எப்பொழுதும் சொல்பவன் ஸாக்ஷாத் பரமசிவ ஸ்வரூபமாகவே ஆய்விடுகிறான் என்று பலச்ருதியில் காணப்படுகிறது. ஒவ்வொரு சுலோகத்திலும் நான்கு தடவை பஞ்சாக்ஷரமந்திரம் வருவதால் இந்த ஸ்தோத்திரம் முழுவதையும் ஒரு தடவை சொல்பவன் 108 தடவை பஞ்சாக்ஷரமந்திர ஜபம் செய்துவிடுகிறான். சிறந்த பிராஸங்களுடனும் அழகிய விருத்தத்துடனும் அமைந்திருப்பதால் இதைப் படிப்பதே மனதிற்கு உல்லாஸம் கொடுக்கும், நம: என்ற பதத்துடன் கூடியிருப்பதால் இந்த சுலோகங்களைச் சொல்லி நமஸ்காரம் செய்பவர்கள் சிறந்த பலனை அடைவார்கள். ஈசுவரனுடைய மூர்த்தியை நன்கு வர்ணிப்பதுடன் அவருடைய பல பெருமைகளையும் நன்கு எடுத்துக் காட்டுகிறது இந்த ஸ்தோத்திரம்]

श्रीमदात्मने गुणैकसिन्धवे नमः शिवाय
धामलेशधूतकोकबन्धवे नमः शिवाय ।
नामशेषितानमद्भवान्धवे नमः शिवाय
पामरेतरप्रधानबन्धवे नमः शिवाय ॥ १ ॥

ஶ்ரீமதா³த்மனே கு³ணைகஸிந்த⁴வே நம: ஶிவாய
தா⁴மலேஶதூ⁴தகோகப³ந்த⁴வே நம: ஶிவாய |
நாமஶேஷிதானமத்³ப⁴வாந்த⁴வே நம: ஶிவாய
பாமரேதரப்ரதா⁴னப³ந்த⁴வே நம: ஶிவாய ||1||

श्रीमदात्मने {ஶ்ரீமதா³த்மனே} = அணிமா முதலிய அஷ்டைச்வர்யங்களுடன் விளங்கும் ஸ்வரூபத்தையுடையவனாயும்; गुणैकसिन्धवे {கு³ணைகஸிந்த⁴வே} = ஸகல குணங்களுக்கும் சிறந்த கடலாயும் விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவ பெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம். धामलेश {தா⁴மலேஶ} = தன்னுடைய சிறிதளவு ஒளியால்; धूत {தூ⁴த} = மங்கிப்போன; कोकबन्धवे {கோகப³ந்த⁴வே} = சூரியனையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; नामशेषित {நாமஶேஷித} = பெயரால்மட்டும் எஞ்சும்படி செய்யப்பட்ட; आनमत् {ஆனமத்} = தன்னை வணங்கும் பக்தர்களுடைய; भवान्धवे {ப⁴வாந்த⁴வே} =

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸம்ஸாரமாகிய பாழும் கிணற்றையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு नमः {நம:} = வணக்கம்; पामरेतर {பாமரேதர} = அறிவற்றவர்களைத்தவிர மற்றவர்களுக்கு (அறிவாளிகளுக்கு); प्रधानबन्धवे {ப்ரதா⁴னப³ந்த⁴வே} = முக்யமான உறவினறான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் அஷ்டைச்வர்யங்களுடனும் விளங்குகின்றான். அவனே எல்லா குணங்களுக்கும் உறைவிடம். அவனுடைய ஒப்பற்ற தேஜஸ்ஸால் சூரியனும் ஒளி குன்றியவனாக ஆகின்றான். அப்பரம்பொருளின் ஒளிபெற்றே சூர்யன், சந்திரன், அக்நி முதலிய அனைத்தும் பிரகாசிக்கின்றது என்று மறைகள் கூறுகின்றன. 'तस्य भासा सर्वमिदं विभाति' அவன் தன்னைப்போற்றும் பக்தர்களின் பிறவிப் பிணியைத் தீர்க்கின்றான். இப்பிறவி என்பது ஓர் இருள் சூழ்ந்த பாழும் கிணறு. இதில் வீழ்ந்தவர்கள் கரையேறுவது அரிது. ஆனால் பகவத்பக்தி என்ற கயிற்றில் கட்டுண்டவர்கள் இதிலிருந்து மீட்கப்படுகின்றனர். அவர்களுக்கு இப் பிறவி என்பது இல்லாமல் போய்விடுகின்றது. பரமேச்வரன் ஞானிகளின் ஆப்த நண்பன் 'ज्ञानी तु आत्मैव मे मतम्' என்று கீதையில் பகவான் கூறுகிறார். இவ்வாறு பக்தர்களுக்கும் ஞானிகளுக்கும் ஆப்தனாகிய சிறந்த குணங்கள் நிறைந்த பரமேச்வரனைப் போற்றுவதால் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பெறலாம். அவ்வாறு விளங்கும் பரமேஸ்வரனை நாம் வணங்குவோமாக.

कालभीतविप्रबालपाल ते नमः शिवाय
शूलभिन्नदुष्टदक्षफाल ते नमः शिवाय ।
मूलकारणाय कालकाल ते नमः शिवाय
पालयाधुना दयालवाल ते नमः शिवाय ।। २ ।।
காலபீ⁴தவிப்ரபா³லபால தே நம: ஶிவாய
ஶூலபி⁴ன்னது³ஷ்டத³க்ஷபா²ல தே நம: ஶிவாய |
மூலகாரணாய காலகால தே நம: ஶிவாய
பாலயாது⁴னா த³யாலவால தே நம: ஶிவாய ||2||

कालभीत {காலபீ⁴த} = யமனைக்கண்டு பயந்த; विप्रबाल {விப்ரபா³ல} = அந்தண குமாரனாகிய மார்க்கண்டேயனை; पाल {பால} = காத்தருளியவனே; शिवाय {ஶிவாய}

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

= சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; शूल {ஶூல} = த்ரிசூலம் என்ற ஆயுதத்தால்; भिन्न {பி4ன்ன} = பிளக்கப்பட்ட; दुष्ट {து3ஷ்ட} = துஷ்டனான; दक्ष {த3க்ஷ} = தக்ஷனுடைய; फाल {பா2ல} = நெற்றியையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; कालकाल {காலகால} = யமனை மாய்த்தவனே; मूलकारणाय {மூலகாரணாய} = எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாய் விளங்குகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம:} = வணக்கம்; दयालवाल {த3யாலவால} = தயவின் இருப்பிடமே; अधुना {அது4னா} = இப்பொழுது; पालय {பாலய} = காத்தருள்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते = உனக்கு; नमः {நம:} = வணக்கம்.

இங்கு பரமேச்வரன் தன்னுடைய பக்தர்களுக்கு எவ்விதம் அருள்புரிகின்றார் என்று விளக்கப்பட்டிருக்கின்றது. மார்க்கண்டேயன் என்ற முனிகுமாரன் பரமேச்வரன் பால் பக்தி கொண்டு பரமேச்வரனைப் பூஜித்து வந்தான். அவனது அந்தியகாலத்தில் யமன் அவனுடைய உயிரை அபஹரிக்க எண்ணித்தானே மார்க்கண்டேயனிடம் சென்று அவன்மீது தனது பாசத்தைப்போட்டான். அதைக்கண்டு பயந்த மார்க்கண்டேயன் சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொள்ள காலனும் கர்வங்கொண்டு சிவலிங்கத்தையும் சேர்த்துப் பாசத்தால் கட்டி இழுக்கப் பரமேச்வரன் சினம் கொண்டு உக்ரரூபத்துடன் அதிலிருந்து தோன்றிக்காலனை மாய்த்துத் தனது பக்தனாகிய மார்க்கண்டேயனைக்காத்து அருளினான். இதனால் பரமேச்வரனிடம் மிகுந்த பக்தியுள்ளவர்களுக்கு யமபாதை ஏற்படாது என்பது தெளிவு. கர்வங்கொண்டவர்களின் கர்வத்தைப் பரமேச்வரன் ஒடுக்குகின்றான் என்பதற்குத் தக்ஷனுடைய கதை இங்கு கூறப் பட்டுள்ளது. தக்ஷன் கர்வத்தால் பரமேச்வரனை அழைக்காமல் ஓர் யாகத்தை ஆரம்பித்தான். அதற்கு பரமேச்வரன் செல்லவில்லை. ஆனால் பரமேச்வரனுடைய பத்னியான தக்ஷனுடைய பெண் தன் தகப்பன் செய்யும் யாகத்தைக் காண ஆவல் கொண்டவளாய் அங்கு செல்ல தக்ஷனும் சிவனை இழிவாகப்பேசி அவமதித்தான். அதனால் கோபங்கொண்ட அவள் தன் யோக பலத்தால் அக்னியை மூட்டித் தன்னுடைய உடலை எரித்து அழித்தாள். அதுகேட்ட சிவ பெருமான் மிகுந்த கோபங்கொண்டவனாய்த் தக்ஷனுடைய யாகத்தை அழித்து அவனையும் ஒழித்தான். அப்பரமேச்வரனே உலகங்களுக்கு எல்லாம் ஆதிகாரணம். அவனிடமிருந்தே சகல சராசரங்களும் உண்டாகியிருக்கின்றன. 'यतो वा इमानि भूतानि जायन्ते' என்ற ஶ்ருதியும் காட்டுகின்றது. அப்பரமேச்வரனே தயவின் உறைவிடம். ஆதலால் அவன் பக்தர்களிடம் தயவுகூர்ந்து அவர்களைக் காக்கின்றான். அவ்வாறு விளங்கும் பரமேச்வரனை நாம் வணங்குவோமாக.

इष्टवस्तुमुख्यदानहेतवे नमः शिवाय
दुष्टदैत्यवंशधूमकेतवे नमः शिवाय ।

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

सृष्टिरक्षणाय धर्मसेतवे नमः शिवाय
अष्टमूर्तये वृषेन्द्रकेतवे नमः शिवाय ॥ ३ ॥
இஷ்டவஸ்துமுக்2யதா3னஹேதவே நம: ஶிவாய
து3ஷ்டதை3த்யவம்’ஶதூ4மகேதவே நம: ஶிவாய |
ஸ்ரு’ஷ்டிரக்ஷணாய த4ர்மஸேதவே நம: ஶிவாய
அஷ்டமூர்தயே வ்ரு’ஷேந்த்3ரகேதவே நம: ஶிவாய ||3||

इष्टवस्तु {இஷ்டவஸ்து} = நமக்குகந்த பொருளையே; मुख्यदान {முக்2யதா3ன} = சிறந்த தானமாகக் கொடுப்பதற்கு; हेतवे {ஹேதவே} = காரணபூதமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; दुष्ट {து3ஷ்ட} = கொடிய; दैत्य {தை3த்ய} = அரக்கர்களுடைய; वंश {வம்’ஶ} = குலத்திற்கு; धूमकेतवे {தூ4மகேதவே} = வால் நக்ஷத்திரமாகத் தோன்றும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; सृष्टिरक्षणाय {ஸ்ரு’ஷ்டிரக்ஷணாய} = படைத்த ஜீவராசிகளைக் காக்கின்றவனாயும்; धर्मसेतवे அறத்தின் அணையாயும் விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; अष्टमूर्तये {அஷ்டமூர்தயே} = எட்டு சரீரங்களை உடையவனும்; वृषेन्द्रकेतवे {த4ர்மஸேதவே} = சிறந்த காளையைக் கொடியாகக்கொண்டவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் நமக்கு வேண்டிய வரங்களையே தந்தருள்கிறான். அவன் கர்வங்கொண்ட அரக்கர்களனைவரையும் அழித்து ஜீவராசிகளனைத்தையும் காத்தருள்கிறான். அணையானது நீரைத்தேக்கி அதன்மூலம் நாட்டைச் செழிப்படையச்செய்வதுபோல சிவனும் தர்மத்தை நிலைநிறுத்தி உலகைக் காக்கிறான். அவனே ‘भूरम्भांस्यनलोऽनिलो ऽम्बरमहर्नाथो हिमांशुः पुमान्’ பிருதிவி, ஜலம் , தேஜஸ், வாயு, ஆகாசம், ஸூர்யன், சந்திரன், புருஷன் என எட்டு ரூபங்களையுடையவனாகத் திகழ்கிறான். அதாவது உலகமெல்லாம் அவன் சரீரமே. அவனுடைய கொடி சிறந்த விருஷபத்தை அடையாளமாகக் கொண்டுள்ளது. அவ்வாறு விளங்கும் சிவபெருமானுக்கு வணக்கம்.

இங்கு दुष्टदैत्यवंशधूमकेतवे என்ற சொல் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. வம்ச பதத்திற்கு இரு பொருள்கள். குலம் என்பது ஒன்று. மூங்கில் என்பது மற்றொன்று. அது போலவே धूमकेतवेतु என்பது வால் நக்ஷத்திரத்தையும் புகையைக் கொடியாகக் கொண்ட அக்நியையும் குறிப்பிடுகிறது. ஆகையால் இங்கு மூங்கில் காட்டை அழிக்கும் அக்நிபோல் காண்பவனென்ற த்வனிப் பொருள் அடங்கியிருக்கிறது. இப்பொருள் சொல்லின் சக்தியையண்டிவருவதால் இதற்கு शब्दशक्तम्लध्वनि என்று பெயர். இதனால் உவமையணியும் வ்யங்க்ய ரூபமாக வெளிப்படுகிறது. எவ்வாறு ஸர்வ சக்தி வாய்ந்த காட்டுத்தீ மூங்கில்

கூட்டத்தை எரித்துச் சாம்பலாக ஆக்கிவிடுகிறதோ அதுபோலவே சிறந்த வன்மை வாய்ந்த பரமேச்வரன் கொடிய அரக்கர்களின் வம்சத்தை அழிக்கிறானென்பது இங்கு நன்கு காட்டப்படுகிறது.

आपदद्रिभेदटङ्कहस्त ते नमः शिवाय
पापहारिदिव्यसिन्धुमस्त ते नमः शिवाय ।
पापदारिणे लसन्नमस्तते नमः शिवाय
शापदोषखण्डनप्रशस्त ते नमः शिवाय ॥ ४ ॥
ஆபத³த்³ரிபே⁴த³டங்கஹஸ்த தே நம꞉ ஶிவாய
பாபஹாரிதி³வ்யஸிந்து⁴மஸ்த தே நம꞉ ஶிவாய |
பாபதா³ரிணே லஸந்நமஸ்ததே நம꞉ ஶிவாய
ஶாபதோ³ஷக²ண்ட³னப்ரஶஸ்த தே நம꞉ ஶிவாய ||4||

आपदद्रि {ஆபத³த்³ரி} = விபத்துக்களாகிய மலைகளை; भेद {பே⁴த³} = பிளக்கின்ற; टङ्क {டங்க} = உளியை; हस्त {ஹஸ்த} = கையில் உடையவனே; शिवाय {ஶிவாய} = சிவ பெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம். पापहारि {பாபஹாரி} = பாபங்களைப்போக்குகின்ற; दिव्यसिन्धु {தி³வ்யஸிந்து⁴} = கங்கையை; मस्त {மஸ்த} = தலையில் உடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; लसन्नमस्तते {லஸந்நமஸ்ததே} = மிளிர்கின்ற வணக்கங்களின் கூட்டத்தையுடையவனே; पापदारिणे {பாபதா³ரிணே} = பாபங்களைப் பிளக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; शापदोषखण्डन {ஶாபதோ³ஷக²ண்ட³ன} = சாபங்களின் தோஷங்களைக் களைவதில்; प्रशस्त {ப்ரஶஸ்த} = புகழ் பெற்றவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உமக்கு ; नमः {நம꞉} = வணக்கம்.

நமக்கு நேரிடும் ஆபத்துக்கள் அனைத்தும் பெரிய மலைகளைப்போன்றவைகள். அவைகளனைத்தையும் சிவ பெருமான் தனது கூரிய த்ரிசூலத்தால் பிளந்து நம்மனை வரையும் காக்கின்றான். பாவங்களையெல்லாம் தீர்த்து நம்மைப் புனிதமாக்கும் கங்காதேவியை அவன் தன்னுடைய சடையில் தாங்கி

நிற்கின்றான். அவனே நமது பாவங்களைத் தீர்த்து நம்மை புனிதர்களாகச் செய்கின்றான்.அவனது திருவடிகளை பக்தர்கள் பணிவதால் அவன் மகிழ்ச்சியுடன் காட்சியளிக்கின்றான். தக்ஷப்ரஜாபதியின் ஆணையைமீறி அவன் பெண்களான நக்ஷத்திரக் கன்னிகைகளிடம் ஸமமான அன்பு வைக்காமல் ரோகிணியிடம் அதிகப் பிரியம் காட்டின சந்திரனுக்கு கலைகள் குறைந்துபோகும்படி சாபம் கொடுத்தான். இந்த சாபதோஷத்தை நீக்கி இந்த சந்திரனைத் தன் சிரஸில் வைத்துக்கொண்டதுடன் கலைகள் வளரும்படியும் அருள்செய்தான். நாமும் அவர் அருள் பெற்றால் எல்லா சாபதோஷங்களும் நீங்கும். இவ்வாறு விளங்கும் சிவபெருமானுடைய திருவடிகளை நாம் வணங்குவோமாக.

व्योमकेश दिव्यभव्यरूप ते नमः शिवाय
हेममेदिनीधरेन्द्रचाप ते नमः शिवाय ।
नाममात्रदग्धसर्वपाप ते नमः शिवाय
कामनैकतानहृदुराप ते नमः शिवाय ॥ ५ ॥
வ்யோமகேஶ தி³வ்யப⁴வ்யரூப தே நம꞉ ஶிவாய
ஹேமமேதி³னீத⁴ரேந்த்³ரசாப தே நம꞉ ஶிவாய |
நாமமாத்ரத³க்³த⁴ஸர்வபாப தே நம꞉ ஶிவாய
காமனைகதானஹ்ருʼது³ராப தே நம꞉ ஶிவாய ||5||

व्योमकेश {வ்யோமகேஶ} = ஆகாசத்தைப்போல் விரிந்த கேசங்களையுடையவனே; दिव्यभव्यरूप {தி³வ்யப⁴வ்யரூப} = திவ்யமாயும் மங்களமாயும் உள்ள உருவத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானானன்; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; हेममेदिनीधरेन्द्र {ஹேமமேதி³னீத⁴ரேந்த்³ர} = தங்க மலையான மேருவை; चाप {சாப} = வில்லாகக்கொண்டவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானானன்; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; नाममात्र {நாமமாத்ர} = திருநாமத்தினாலேயே; दग्ध {த³க்³த⁴} = எரிக்கப்பட்ட; सर्वपाप {ஸர்வபாப} = எல்லாப்பாவங்களையுமுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; कामनैकतानहृत् {காமனைகதானஹ்ருʼத்} = காமங்களிலேயே எப்பொழுதும் ஈடுபட்ட மனமுள்ளவர்களால்; दुराप {து³ராப} = அடைய முடியாதவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

கங்கையைத் தன்னுடைய சடையில் தாங்குவதற்காக சிவபெருமான் தன் சடையை விரிக்க அதுவும் ஆகாயம் முழுவதையும் அளாவி நின்றது. ஆகாசம் முழுவதும் வ்யாபித்து நிற்கும் சடையை தரித்துக்கொண்டிருப்பதால் அப்பெருமானுக்கு வ்யோமகேசர் என்ற பெயர் வழங்கலாயிற்று. மேலும்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

சிவபெருமான் தன்னுடைய விராட்ரூபத்தை எடுக்கும்பொழுது ஆகாசமே அவருடைய கேசங்களாக ஆயிற்று. ஆதலால் அவனுக்கு வ்யோமகேசன் என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறலாம். அவன் திவ்ய மங்கள விக்ரஹத்தையுடையவன். அவனது தோற்றம் பக்தர்களுக்கு மிகுந்த ஆனந்தத்தை தருகின்றது. அவன் ஸர்வ சக்தி வாய்ந்தவன் அசுரர்களை அழிப்பதற்கு மேரு மலையை வில்லாக ஏந்தியவன். அவனுடைய திருநாமங்களை உச்சரித்தமாத்திரத்திலேயே எல்லாப் பாபங்களும் சாம்பலாக ஆகிவிடுகின்றன. ஆனால் பரிசுத்தமான மனது உடையவர்களே அவனை ஸாக்ஷாத்கரிக்க முடியும். ஏனெனில் மனதில் பலவிதமான ஆசைகளையுடையவர்களுக்கு முன் அவன் தோன்றமாட்டான். இவ்வாறு விளங்கும் சிவபெருமானுடைய திருவடிகளை நாம் வணங்குவோமாக.

ब्रह्ममस्तकावलीनिबद्ध ते नमः शिवाय
जिह्मगेन्द्रकुण्डलप्रसिद्ध ते नमः शिवाय ।
ब्रह्मणे प्रणीतवेदपद्धते नमः शिवाय
जिह्मकालदेहदत्तपद्धते नमः शिवाय ।। ६ ।।
ப்³ரஹ்மமஸ்தகாவலீநிப³த்³த⁴ தே நம꞉ ஶிவாய
ஜிஹ்மகே³ந்த்³ரகுண்ட³லப்ரஸித்³த⁴ தே நம꞉ ஶிவாய।
ப்³ரஹ்மணே ப்ரணீதவேத³பத்³த⁴தே நம꞉ ஶிவாய
ஜிஹ்மகாலதே³ஹத³த்தபத்³த⁴தே நம꞉ ஶிவாய ||6||

ब्रह्म {ப்³ரஹ்ம} = பிரம்மாக்களின்; मस्तकावली {மஸ்தகாவலீ} = தலைகளின் வரிசைகளால்; निबद्ध {நிப³த்³த⁴} = கட்டப்பட்டவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; जिह्मगेन्द्र {ஜிஹ்மகே³ந்த்³ர} = வளைந்து செல்கின்ற பாம்புகளை; कुण्डलप्रसिद्ध {குண்ட³லப்ரஸித்³த⁴} = குண்டலமாக அணிவதால் புகழ் பெற்றவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; ब्रह्मणे {ப்³ரஹ்மணே} ப்ரம்மாவிற்கு; प्रणीतवेदपद्धते {ப்ரணீதவேத³பத்³த⁴தே} = வேத மார்க்கங்களை அருளியவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்; जिह्मकाल {ஜிஹ்மகால} = குடிலமான யமனுடைய; देह {தே³ஹ} = உடலில்; दत्त {த³த்த} = கொடுக்கப்பட்ட; पद्धते {பத்³த⁴தே} = பாதப்ரஹாரத்தையுடையவனே; शिवाय {ஶிவாய} = சிவபெருமானான; ते {தே} = உனக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

சிருஷ்டிகர்த்தாவாக வந்து தன் ஆயுள் முடிந்து மறைந்துபோன எத்தனையோ ப்ரஹ்மாக்களின் மண்டை ஓட்டுக்களை மாலையாக அணிந்து கொண்டிருக்கிறார். வளைந்து செல்லும் பாம்புகள் அவனுடைய காதணியாய்

விளங்குகின்றன. அவர் ப்ரஹ்மாவை உண்டுபண்ணி அந்த பிரஹ்மா சிருஷ்டியை நடத்த வேதமார்க்கத்தை அவருக்கு அருளினார். 'यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।' கொடிய தன்மை வாய்ந்த காலனைக் காலால் உதைத்தவன். அவ்வாறு விளங்கும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குவோமாக.

இந்த சுலோகத்தில் पद्धते என்ற சொல் இரு தடவை உபயோகிக்கப்பட்டுள்ளது. அதனால் இங்கு पुनरुक्तं அல்லது சொன்னதையே திரும்பச்சொல்லல் என்ற தோஷம் ஏற்படுமோ என்ற ஐயம் உண்டாகலாம். ஆனால் இது வெவ்வேறு அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. प्रणीतवेदपद्धते என்பதில் पद्धति என்பதற்கு வழி என்றும் कालदेहदत्तपद्धते என்பதில் पद्धति என்பதற்குக் காலால் உதைத்தல் என்றும் பொருள். ஆகையால் இங்கு पुनरुक्तं என்ற தோஷம் இல்லை. ஆனால் पुनरुक्तवदाभास மென்ற அணி அமைந்துள்ளது. மென்ற (6)

कामनाशनाय शुद्धकर्मणे नमः शिवाय
सामगानजायमानशर्मणे नमः शिवाय ।
हेमकान्तिचाकचक्यवर्मणे नमः शिवाय
सामजासुराङ्गलब्धचर्मणे नमः शिवाय ॥ ७ ॥
காமநாஶநாய ஶுத்³த⁴கர்மணே நம꞉ ஶிவாய
ஸாமகா³நஜாயமாநஶர்மணே நம꞉ ஶிவாய |
ஹேமகாந்திசாகசக்யவர்மணே நம꞉ ஶிவாய
ஸாமஜாஸுராங்க³லப்³த⁴சர்மணே நம꞉ ஶிவாய ||7||

कामनाशनाय {காமநாஶநாய} = மன்மதனை அழித்தவனும்; शुद्धकर्मणे {ஶுத்³த⁴கர்மணே} = தூய்மைவாய்ந்த செயல்களையுடையவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; सामगान {ஸாமகா³ந} = ஸாமவேதத்தை கானம் செய்வதால்; जायमान {ஜாயமாந} = உண்டாகின்ற; शर्मणे {ஶர்மணே} = இன்பத்தையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; हेमकान्ति {ஹேமகாந்தி} = பொன்னின் ஒளியால்; चाकचक्य {சாகசக்ய} = மின்னுகின்ற; वर्मणे {வர்மணே} = கவசத்தையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; सामजासुर {ஸாமஜாஸுர} = கஜாஸுரனுடைய; अङ्ग {அங்க³} = அங்கத்திலிருந்து; लब्ध {லப்³த⁴} = அடையப்பட்ட; चर्मणे {சர்மணே} = தோலையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

சிவபெருமான் மன்மதனை எரித்தவர். அவ்வாறு இருப்பினும் உலகனைத்தையும் காப்பதான தூய்மை வாய்ந்த செயலிலேயே அவர் ஈடுபட்டுள்ளார். அவர் ஸாம கானத்தினால் மிகுந்த மகிழ்ச்சியையடைகிறார். அவர் அணிந்திருக்கும் கவசம் பொன்மயமானது. அது ஒளியுடன் மின்னிக்கொண்டிருக்கின்றது. ஒருசமயம் அவர் கஜன் என்ற ஓர் அஸுரனைக்கொன்று அவனுடைய தோலையே தனக்கு ஆடையாகக் கொண்டார். அவ்வாறு விளங்கும் பரமேச்வரனுடைய திருவடிகளை நாம் வணங்குவோமாக.

जन्ममृत्युघोरदुःखहारिणे नमः शिवाय
चिन्मयैकरूपदेहधारिणे नमः शिवाय ।
मन्मनोरथावपूर्तिकारिणे नमः शिवाय
सन्मनोगताय कामवैरिणे नमः शिवाय ॥ ८ ॥
ஜன்மம்ரு’த்யுகோ⁴ரது³:க²ஹாரிணே நம: ஶிவாய
சின்மயைகரூபதே³ஹதா⁴ரிணே நம: ஶிவாய |
மன்மனோரதா²வபூர்திகாரிணே நம: ஶிவாய
ஸன்மனோக³தாய காமவைரிணே நம: ஶிவாய ||8||

जन्ममृत्युघोरदुःख {ஜன்மம்ரு’த்யுகோ⁴ரது³:க²} = பிறப்பு இறப்பு இவைகளால் உண்டாகும் பயங்கரமான துன்பங்களை; हारिणे {ஹாரிணே} = போக்குகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; चिन्मयैकरूप {சின்மயைகரூப} = சைதன்யம் ஒன்றையே ஸ்வரூபமாகக்கொண்ட; देहधारिणे {தே³ஹதா⁴ரிணே} = சரீரத்தை தரிக்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; मन्मनोरथावपूर्तिकारिणे {மன்மனோரதா²வபூர்திகாரிணே} = என்னுடைய அபீஷ்டங்களை நிறைவேற்றுகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; सन्मनोगताय {ஸன்மனோக³தாய} = ஸாதுக்களின் மனதை அடைந்துள்ள; कामवैरिणे {காமவைரிணே} = காமனின் பகைவனான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமானைப் போற்றுகின்றவர்கள் மோக்ஷ ஸாம் ராஜ்யத்தை அடைகிறார்கள். அதனால் அவர்களுக்கு மறுபடியும் பிறப்பு இறப்பு முதலான துன்பம் ஏற்படுவதில்லை. அவர் ஞான ஸ்வரூபி. அவரை யடைகின்றவர்கள் ஆத்ம ஞானத்தைப் பெறுகிறார்கள் ज्ञानादेव तु कैवल्यं என்பதால் அவர்களுக்கு ஞானமுண்டான உடனேயே ஸம்ஸாரபாதை நீங்கிவிடுகின்றது. ஞான ஒளியாய்த் தோன்றும் சிவபெருமான் மோக்ஷத்தைக் கொடுத்தபோதிலும் பக்தர்களின் மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றிவைக்கிறார். ஏனெனில் அவர் பக்தர்களின் மனதிலேயே வாஸம் செய்கின்றார் அவர் பக்தர்களின் மனதில்

எழும் பலவித ஆசைகளை அகற்றி அவர்களனைவருக்கும் அருள்புரிகிறார். அவ்வாறு விளங்கும் பரமசிவனை நாம் வணங்குவோமாக.

यक्षराजबन्धवे दयालवे नमः शिवाय
दक्षपाणिशोभिकाञ्चनालवे नमः शिवाय ।
पक्षिराजवाहहृच्छयालवे नमः शिवाय
अक्षिफाल वेदपूततालवे नमः शिवाय ॥ ९ ॥
யக்ஷராஜப[3]ந்த[4]வே த[3]யாலவே நம: ஶிவாய
த[3]க்ஷபாணிஶோபி[4]காஞ்சனாலவே நம: ஶிவாய ।
பக்ஷிராஜவாஹஹ்ரு’ச்ச[2]யாலவே நம: ஶிவாய
அக்ஷிபா[2]ல வேத[3]பூததாலவே நம: ஶிவாய ||9||

यक्षराज யக்ஷர்களுக்கரசனாகிய குபேரனுடைய; बन्धवे நண்பனும்; दयालवे கருணையுள்ளவனுமான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; दक्षपाणि வலது கையில்; शोभि விளங்குகின்ற; काञ्चनालवे தங்கமயமான பாத்திரத்தையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; पक्षिराज பக்ஷிகளுக்கு அரசனாகிய கருடனை; वाह வாஹனமாக உடைய மகாவிஷ்ணுவின்ச हृच्छयालवे இருதயத்தில் பள்ளி கொண்டிருக்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; अक्षिफाल நெற்றியில் கண்ணையுடையவரே; वेदपूततालवे நான்மறைகளால் புனிதமான தாலுவையுடையவரான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் யக்ஷராஜனான குபேரனுடைய நண்பர். ஆதலால் அவர் குபேரனுடைய பட்டினத்திற்கருகில் உள்ள கைலயங்கிரியில் வஸித்து வருகின்றார். கருணை உள்ளம் கொண்டவர். அவர் தன்னுடைய வலது கையில் தங்க மயமான பாத்திரத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார். அவர் கருடவாஹனனான மஹாவிஷ்ணுவின் ஹ்ருதயகமலத்தில் வீற்றிருக்கின்றார். துஷ்டர்களை அழிப்பதற்காக அவர் நெற்றியில் கண் உள்ளவர். நான்மறைகளும் அவருடைய முகத்திலேயே எப்பொழுதும் இருப்பதால் அவர் மிகவும் பரிசுத்தமான முகத்தையுடையவர். அவ்வாறு பிரகாசிக்கும் சிவபெருமானை நாம் வணங்குவோமாக.

दक्षहस्तनिष्ठजातवेदसे नमः शिवाय
अक्षरात्मने नमद्भिडौजसे नमः शिवाय ।
दीक्षितप्रकाशितात्मतेजसे नमः शिवाय
उक्षराजवाह ते सतां गते नमः शिवाय ॥ १० ॥

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

த³க்ஷஹஸ்தநிஷ்ட²ஜாதவேத³ஸே நம꞉ ஶிவாய
அக்ஷராத்மனே நமத்³பி⁴டௌ³ஜஸே நம꞉ ஶிவாய |
தீ³க்ஷிதப்ரகாஶிதாத்மதேஜஸே நம꞉ ஶிவாய
உக்ஷராஜவாஹ தே ஸதாம்' க³தே நம꞉ ஶிவாய ||**10**||

दक्षहस्तनिष्ठ {த³க்ஷஹஸ்தநிஷ்ட²} = வலது கையிலுள்ள; जातवेदसे {ஜாதவேத³ஸே} = அக்னியையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; अक्षरात्मने {அக்ஷராத்மனே} = அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள மாத்ருகாவர்ண ஸ்வரூபியாயும், அழிவற்ற ஸ்வரூப -முள்ளவராயும்; नमद्भिडौजसे {நமத்³பி⁴டௌ³ஜஸே} = வணங்குகின்ற இந்திரனை உடையவராயும் இருக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; दीक्षितप्रकाशित {தீ³க்ஷிதப்ரகாஶித} = தீக்ஷைபெற்றவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட; आत्मतेजसे {அத்மதேஜஸே} = தன்னுடைய ஜ்யோதிஸ்வரூபத்தையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம꞉} = வணக்கம்; उक्षराजवाह {உக்ஷராஜவாஹ} = சிறந்த காளை மாட்டை வாஹனமாக உடையவரே; सतां {ஸதாம்'} = நல்லவர்களுக்கு; गते {க³தே} = ஏன் புகலிடமாயிருப்பவரே ! शिवाय {ஶிவாய} = சிவபெருமானாகிய; ते {தே} = உமக்கு; नमः {நம꞉} = வணக்கம்.

சிவபிரானுக்குத் தீங்கு செய்யக் கருதி தாருகாவன முனிவர்கள் ஆபிசார வேள்வியின் மூலம் அனுப்பிய அக்னியைக் கையில் தாங்கி இருக்கிறார். தன் ஸ்வரூபத்திற்கு யாரும் தீங்கு செய்ய முடியாது என்பதை உலகிற்குக் காட்டுகிறார். அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள எல்லா அக்ஷரங்களும் அவருடைய ஸ்வரூபங்கள். அவர், அழிவற்றவர். இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களாலும் வணங்கப்பட்டவர். சிவதீக்ஷை பெற்றவர்களுக்கு அவர் தன்னுடைய ரஹஸ்யமான ஜ்யோதி ஸ்வரூபத்தைக் காட்டுகின்றார். அவர் விருஷப வாஹனத்தின்மீது அமர்ந்து கொண்டிருக்கின்றார். நல்லவர்களால் அடையத்தக்கவர் அவர்தான். அவ்வாறு விளங்கும் சிவபெருமானுடைய திருவடிகளை நாம் அனைவரும் வணங்குவோமாக.

राजताचलेन्द्रसानुवासिने नमः शिवाय
राजमाननित्यमन्दहासिने नमः शिवाय ।
राजकोरकावतंसभासिने नमः शिवाय
राजराजमित्रताप्रकाशिने नमः शिवाय ॥ ११ ॥
ராஜதாசலேந்த்³ரஸானுவாஸினே நம꞉ ஶிவாய
ராஜமானநித்யமந்த³ஹாஸினே நம꞉ ஶிவாய |
ராஜகோரகாவதம்'ஸபா⁴ஸினே நம꞉ ஶிவாய
ராஜராஜமித்ரதாப்ரகாஶினே நம꞉ ஶிவாய ||**11**||

राजताचलेन्द्र {ராஜதாசலேந்த்³ர} = வெள்ளிமலையினுடைய; सानु {ஸானு} = தாழ்வரையில்; वासिने {வாஸினே} = வஸிக்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; राजमान {ராஜமான} = விளங்குகின்ற; नित्यमन्दहासिने {நித்யமந்த³ஹாஸினே} = எப்பொழுதும் புன் சிரிப்பையுடைய; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; राजकोरकावतंसभासिने {ராஜகோரகாவதம்'ஸபா⁴ஸினே} = பிறைச் சந்திரனை சிரோபூஷணமாகக் கொண்டு விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; राजराज {ராஜராஜ} = குபேரனிடம்; मित्रता {மித்ரதா} = நட்பை; प्रकाशिने {ப்ரகாஶினே} = வெளிப்படுத்துகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.



சிவபெருமான் வெள்ளி மலையான கைலயங்கிரியைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளார். அவர் ஆனந்த வஸ்துவாதலால் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார். அவருடைய முகத்தில் புன்முறுவல் தவழுவதால் அது பக்தர்களைப் பரவசப் படுத்தக் கூடியதாகத் திகழ்கின்றது. சந்திரனை சிரஸில் பூஷணமாக அணிந்திருக்கின்றார். அவர் குபேரனுடைய நண்பன். ஆதலால் அவர் தன்னுடைய நட்பைக் காட்டு வதற்காக மற்ற இடங்களையெல்லாம் விடுத்துக் குபேர னுடைய இருப்பிடமாகிய கைலயங்கிரியையே அடைந்து அங்கு எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார். அவ்வாறு பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்யத்தகுந்த கருணா மூர்த்தியான சிவபெருமானுடைய பாதபத்மங்களை நாம் என்றும் போற்றுவோமாக. (11)

दीनमानवालिकामधेनवे नमः शिवाय
सूनबाणदाहकृत्कृशानवे नमः शिवाय ।
स्वानुरागभक्तरत्नसानवे नमः शिवाय
दानवान्धकारचण्डभानवे नमः शिवाय ॥ १२ ॥
தீ³னமானவாலிகாமதே⁴னவே நம: ஶிவாய

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸூனபா³ணதா³ஹக்ரு’த்க்ரு’ஶானவே நம: ஶிவாய |
ஸ்வானுராக³ப⁴க்தரத்னஸானவே நம: ஶிவாய
தா³னவாந்த⁴காரசண்ட³பா⁴னவே நம: ஶிவாய ||12||

दीनमानवालि {தீ³னமானவாலி} = ஏழைகளான மனிதவர்கத்திற்கு; कामधेनवे {காமதே⁴னவே} = மனோபீஷ்டங்களை நிறைவேற்றும் காமதேனுபோல் விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; सूनबाण {ஸூனபா³ண} = மலர்களை அம்புகளாக உடைய மன்மதனை; दाहकृत् {தா³ஹக்ரு’த்} = எரிக்கின்ற; कृशानवे {க்ரு’ஶானவே} = அக்நியான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; स्वानुराग {ஸ்வானுராக³} = தன்னிடத்தில் அன்புகொண்ட; भक्त {ப⁴க்த} = பக்தர்களுக்கு; रत्नसानवे {ரத்னஸானவே} = மேருமலையாக இருக்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; दानवान्धकार {தா³னவாந்த⁴கார} = தானவர்களாகிய இருட்டிற்கு; चण्डभानवे {சண்ட³பா⁴னவே} = பிரசண்டமான சூரியனாக இருக்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

பரமேச்வரன் காமதேனுவைப்போல் ஏழைகளின் மனோபீஷ்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களைக் காத்தருள்கிறான். அவன் புஷ்பங்களை அம்புகளாக உடைய மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினான். இதனால் அவனை அண்டும் பக்தர்கள் அனைவரும் ஆசாபாசங்களிலிருந்து விடுபட்டுத் தங்களுக்கு வேண்டிய நன்மைகளை அடைந்து கடைசியாக சிவஸாயுஜ்யத்தைப் பெறுகிறார்கள். பக்தர்கள் பக்தியுடன் பூஜிக்கும் நோக்கத்துடன் ஈசுவரன் பேரில் புஷ்பங்களைப் போடுகின்றனர். அவர்களுக்கு அவன் அருள் செய்கிறான். அதே புஷ்பங்களைக் கெட்ட எண்ணத்துடன் சிவன்மேல் விடுத்த காமனை நெற்றிக் கண்ணால் எரித்தான். இதிலிருந்து வெளிச் செயலைக் காட்டிலும் உள் எண்ணத்தை தான் அவன் கவனிப்பான் என்று தெரிகிறது. மேரு மலை போல் அவன் பக்தர்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கிறான். அவன் தானவர்கள் என்ற கார் இருளை நீக்கவல்ல மிகுந்த பிரகாசம் வாய்ந்த ஸூர்யபகவான். அதாவது ஸூர்யன் இருளை நீக்கி ஒளியைத் தந்து உலகைக் காப்பதுபோல் பரமேச்வரனும் துஷ்டர்களை அழித்து அனைவரையும் ரக்ஷிக்கின்றான். இவ்வாறு விளங்கும் பரமேச்வரனுடைய பாத கமலங்களில் நாம் பணிவோமாக.

सर्वमङ्गलाकुचाग्रशायिने नमः शिवाय
सर्वदेवतागणातिशायिने नमः शिवाय ।
पूर्वदेवनाशसंविधायिने नमः शिवाय

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

सर्वमन्मनोजभङ्गदायिने नमः शिवाय ॥ १३ ॥
ஸர்வமங்க³லாகுசாக்³ரஶாயினே நம: ஶிவாய
ஸர்வதே³வதாக³ணாதிஶாயினே நம: ஶிவாய |
பூர்வதே³வநாஶஸம்’விதா⁴யினே நம: ஶிவாய
ஸர்வமன்மனோஜப⁴ங்க³தா³யினே நம: ஶிவாய **||13||**

सर्वमङ्गला {ஸர்வமங்க³லா} = பார்வதீ தேவியினுடைய; कुचाग्र {குசாக்³ர} = ஸ்தனங்களின் மேல்; शायिने {ஶாயினே} = பள்ளிகொண்டிருப்பவரான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; सर्वदेवतागण {ஸர்வதே³வதாக³ணா} = எல்லாத் தேவதைகளின் கூட்டங்களைக் காட்டிலும்; अतिशायिने {அதிஶாயினே} = சிறந்து விளங்கும்; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; पूर्वदेव {பூர்வதே³வ} = அஸுரர்களுடைய; नाश {நாஶ} = அழிவை; संविधायिने {ஸம்’விதா⁴யினே} = நன்கு செய்தவரான; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; मन्मनोज {மன்மனோஜ} = என் மனதில் எழும் எல்லாக் காமங்களுக்கும்; भङ्गदायिने {ப⁴ங்க³தா³யினே} = முறிவைச் செய்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

பரமேச்வரன் தன் பார்யையான பார்வதீ தேவியுடன் இணை பிரியாது இருப்பவர். அவரே எல்லாத் தேவதைகளைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றவர். இன்னல்களை விளைவிக்கும் அஸுரக் கூட்டங்களை யெல்லாம் அழித்து உலகங்களைக் காக்கின்றவர். என் மனதில் எழும் எல்லாத் துராசைகளையும் அழித்து பரிசுத்தமாக்குபவர். அவ்வாறு சிறந்து விளங்கும் அம்பிகாபதியான பரமேச்வரனுடைய பாத கமலங்களை நாம் வணங்குவோமாக.

स्तोकभक्तितोऽपि भक्तपोषिणे नमः शिवाय
माकरन्दसारवर्षिभाषिणे नमः शिवाय ।
एकबिल्वदानतोऽपि तोषिणे नमः शिवाय
नैकजन्मपापजालशोषिणे नमः शिवाय ॥ १४ ॥
ஸ்தோகப⁴க்திதோ(அ)பி ப⁴க்தபோஷிணே நம: ஶிவாய
மாகரந்த³ஸாரவர்ஷிபா⁴ஷிணே நம: ஶிவாய |
ஏகபி³ல்வதா³னதோ(அ)பி தோஷிணே நம: ஶிவாய
நைகஜன்மபாபஜாலஶோஷிணே நம: ஶிவாய **||14||**

स्तोकभक्तितोऽपि சிறிது பக்தியால் கூட; भक्तपोषिणे பக்தர்களைக் காப்பாற்றி வளர்க்கின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; माकरन्दसारवर्षि தேனில் இனிமையைப் போன்ற இனிமையைப் பொழியும்படியாக; भाषिणे பேசுகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு;नमः {நம:} = வணக்கம்;

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

एकबिल्वदानतोऽपि ஒரு பில்வதளத்தை அர்பணம் செய்வதால்கூட; तोषिणे மகிழ்ச்சியடைகின்ற; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்; नैकजन्मपापजाल வைக்கப்பட்ட பாபக்கூட்டங்களை; शोषिणे நாசம் செய்கின்ற உளவு; शिवाय {ஶிவாய} = சிவபெருமானுக்கு; नमः {நம:} = வணக்கம்.

சிவபெருமான் பக்தர்களிடம் மிகவும் பிரியமுள்ளவர். பக்தியின் ஆரம்பதசையில் இருப்பவர்களையும் தன் அருளால் மேலும் பக்தியை வளரச்செய்து காப்பாற்றுபவர். பாலுக்காக உபமன்யு என்னும் சிறுவன் காட்டிய பக்திக்குக் கட்டுப்பட்டு பாற்கடலை அருளியவர். அவர் பக்தர்களுக்கு அருள்புரிவதற்காக அவர்கள் முன் தோன்றித் தனது இனிய மொழிகளால் அவர்களை மகிழ்விக்கின்றார். பக்தர்களுக்கு அடிமையான பரமேச்வரனுடைய அருளைப் பெறுவது மிகவும் சுலபம். அவரிடம் உண்மையான பக்தி வைத்து ஓர் பில்வதளத்தை அவருக்கு அர்ப்பணம் செய்தால்கூட உடனே அவர் அளவற்ற மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொள்வார். ஈசுவரனுக்கு आशुतोषी என்று ஒரு பெயர் உண்டு. வெகு விரைவில் ஸந்தோஷம் அடைபவர் என்பது இதன் பொருள். பக்தியுடன் ஓர் பில்வதளத்தை அர்ப்பணம்செய்த ஒரு பக்தன் நேரில் காக்ஷிகொடுத்த பகவானிடம் கைலாஸ லோகத்தை அடையவேண்டும் என்று வரம் கேட்டு அதை அடைந்து, ஒரு பில்வதளத்தால் கைலாஸத்தை விலைக்கு வாங்கி ஈசுவரனை ஏமாற்றிவிட்டதாக நினைக்கின்றான். மஹேச்வரரோ இந்தப் பக்தனுக்கு என் ஸாரூப்ய முக்தியைக் கொடுக்கவிருந்தும் இவன் இதை கேட்கத் தெரியாமல் ஏமாந்துவிட்டதாக நினைக்கிறார். பரமேச்வரன் அவர்கள் பற்பல பிறவிகளில் சேர்த்துவைத்த பாபங்கள் அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கி அவர்களைப் புனிதர்களாகச் செய்கின்றார். இவ்வாறு சிறந்து விளங்கும் பரமேச்வரனை வணங்குவோமாக.

ஸத் ஸம்பிரதாயம் (உபாஸனா) இதழில் இதன் தொடற்சியை பார்க்கவும்

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்